
# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 348 | 4 Pages | 10.7.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 348 | 4 பக்கங்கள் | 10.7.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மூன்று மடங்கு அதிகமாக உழைப்பேன்: ரஷியாவில் பிரதமர் மோடி உரை




மாஸ்கோ, ஜூலை 10

ரஷியாவுக்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, மாஸ்கோவில் இந்திய வம்சாவளியினர் மத்தியில் பேசினார். அப்போது பிரதமர் மோடி பேசியதாவது:

மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்த பிறகு, முதல்முறையாக புலம்பெயர்ந்த இந்தியர்களுடன் உரையாடுகிறேன். மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்று இன்றுடன் ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது. 3 மடங்கு வலிமையுடன், 3 மடங்கு அதிக வேகத்தில் பணியாற்றுவேன் என்ற உறுதியுடன் பதவியேற்றேன். இம்முறை இந்தியாவை உலகின் மூன்றாவது பொருளாதாரமாக மாற்றுவதே இலக்கு. இந்த முறை ஏழைகளுக்கு மூன்றாவது கட்டமாக 3 கோடி வீடுகள் வழங்கப்படவுள்ளது. 3 கோடி கிராம பெண்களை லட்சாதிபதி ஆக்குவதே அரசின் இலக்கு.

உலகில் வேறு எந்த நாடும் சென்றடைய முடியாத நிலவின் பகுதிக்கு சந்திரயானை வெற்றி அடைய செய்த நாடு இந்தியா. டிஜிட்டல் பரிவர்த்தனையில் உலகுக்கு நம்பகமான மாதிரியை வழங்கும் நடாக இந்தியா உள்ளது. சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றும் நாடாக இந்தியா இன்று உள்ளது. இந்தியா மாற்றத்தை நோக்கி செல்வதாக அனைவரும் கூறுகிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சியை கண்டு உலகம் வியப்படைந்துள்ளது" இவ்வாறு அவர் கூறினார்.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஆழ்வார் திருமஞ்சனம்



யுகாதி, வருடாந்திர பிரம்மோற்சவம், வைகுண்ட ஏகாதசி, ஆணிவார ஆஸ்தானம் ஆகிய நாட்களுக்கு முன் வரும் செவ்வாய்க்கிழமை அன்று திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஆழ்வார் திருமஞ்சனம் என்ற பெயரில், கோவிலை முழுமையாக கழுவி சுத்தம் செய்து சுவர்களில் 'பரிமளம்' எனப்படும் நறுமனை கலவை தெளிப்பது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு வருகிற 16ந்தேதி ஆணிவார ஆஸ்தான தினத்தை முன்னிட்டு, இன்று திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெற்றது. அப்போது தேவஸ்தான அறங்காவலர் குழுவினர், நிர்வாக அதிகாரி, ஊழியர்கள் ஆகியோர் கோவில் கருவறை துவங்கி அனைத்து பகுதிகளையும் கழுவி சுத்தம் செய்தனர். ஆழ்வார் திருமஞ்சனத்தைதொடர்ந்துபக்தர்கள்தரிசனத்திற்காகஅனுமதிக்கப்பட்டனர்.

## மராட்டியம்: கார் மோதி பெண் பலியான விவகாரம்; மதுபான பாருக்கு கலால் துறை சீல்

ஒர்லி, ஜூலை 10

மராட்டியத்தில் மதுபான பாரை மூடுவதற்கான காலக்கெடு மற்றும் கலால் துறை விதிகளை மீறும் பார்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மராட்டியத்தின் ஒர்லி நகரில் கொலிவாடா பகுதியில் வசித்து வருபவர் பிரதீப் நகவா (வயது 50). இவருடைய மனைவி காவேரி நகவா (வயது 45). கடந்த ஞாயிற்று கிழமை காலை 5.30 மணியளவில் இவர்கள் இருவரும் ஸ்கூட்டர் ஒன்றில் மீன் வாங்க சென்றனர்.

இந்நிலையில், அவர்கள் மீன் வாங்கி கொண்டு திரும்பி வரும்போது, பின்னால் வந்த பி.எம்.டபிள்யூ. ரக கார் ஒன்று இவர்களுடைய ஸ்கூட்டர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. இதில் இருவரும் தூக்கி வீசப்பட்டனர். பிரதீப் தரையில் விழுந்த நிலையில், காவேரி காரில் 100 மீட்டர் தொலைவு வரை இழுத்து செல்லப்பட்டு உள்ளார்.

அவர் பின்னர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.எனினும்அவர்உயிரிழந்துவிட்டார்எனதெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், காரை குடிபோதையில் ஓட்டி சென்றது முதல்மந்திரி ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா கட்சியின் துணை தலைவர்களில் ஒருவரான ராஜேஷ் ஷா என்பவரின் மகன் மிஹிர் ஷா (வயது 24) என்பது போலீசாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் நடந்ததும் அவர் தப்பியோடி விட்டார். இதுபற்றி ராஜேஷ் ஷா மற்றும் அவருடைய கார் ஓட்டுநர் ராஜரிஷி ராஜேந்திர சிங் பிஜாவத் ஆகியோரை காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று போலீசார் விசாரித்து வருகிறார்கள். 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

சம்பவத்தன்று, ஜுகுவில் உள்ள பார் ஒன்றில் மிஹிர் ஷா மதுபானம் குடித்து இருக்கிறார். அவர் வீடு திரும்பும்போது, ஓட்டுநரிடம் நீண்ட தொலைவுக்கு காரை ஓட்டி செல்லும்படி கூறியுள்ளார். கார் ஒர்லிக்கு வந்ததும், காரை ஓட்டுகிறேன் என மிஹிர் கூறியுள்ளார். அதன்பின்னர் காரை அதிவிரைவாக ஓட்டி சென்ற மிஹிர் ஸ்கூட்டர் மீது மோதியுள்ளார்.

இந்த சம்பவம் துரதிர்ஷ்டவசம் வாய்ந்தது என கூறியுள்ள முதல்மந்திரி ஏக்நாத் ஷிண்டே, சட்டம் அதன் கடமையை செய்யும். சட்டத்தின் முன் அனைவரும் சமம். போலீசாரிடம் பேசியுள்ளேன். கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியுள்ளார்.

இந்த விபத்துக்கு பின் மிஹிர் ஷா தப்பியோடி விட்டார். அவருக்கு, அவருடைய காதலி அடைக்கலம் கொடுத்திருக்க கூடும் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர். அவர் தப்பி, ஒளிந்து கொள்ள உதவியிருக்க கூடும் என்றும் போலீசார் சந்தேகம் தெரிவித்து உள்ளனர்.

இந்நிலையில், இந்த சம்பவம் பற்றி பார் உரிமையாளர் கரண் ஷா கூறும்போது, மிஹிர் ஷாவுடன் அவருடைய நண்பர்கள் 4 பேர் வந்தனர். அவர்கள் அனைவரும் பீர் குடித்த பின்னர் இயல்பான நிலையில் இருந்தனர் என்றார்.

சி.சி.டி.வி. காட்சிகளை போலீசார் கைப்பற்றி சென்றுள்ளனர் என கூறியுள்ளார். இந்நிலையில், விபத்து ஏற்படுத்திய மிஹிர் ஷா சென்ற, தனியார் மதுபான பாருக்கு கலால் துறையினர் சீல் வைத்து மூடியுள்ளனர்.

ஜுகுவில் உள்ள இந்த பாரின் உரிமையாளர்கள், கலால் துறையின் விதிகளை காற்றில் பறக்க விட்டனர் என்பது 2 நாள் விசாரணைக்கு பின்னர் தெரிய வந்ததும், இந்த பாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. குடித்து விட்டு, வாகனம் ஓட்டுபவர்களுக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுக்கும்படி மும்பை போலீசாருக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது.

பாரை மூடுவதற்கான காலக்கெடு மற்றும் கலால் துறை விதிகளை மீறும் பார்கள் மூடப்படுவதுடன், அவற்றின் உரிமங்கள் திரும்ப பெறப்படும் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த விபத்து நடப்பதற்கு முன், நண்பர்களுடன் சேர்ந்து பாரில் மிஹிர் ஷா செலவிட்ட தொகை ரூ.18 ஆயிரம் என தெரிய வந்துள்ளது. அதற்கான பில் தொகையை மிஹிர் ஷாவின் நண்பர் செலுத்தி உள்ளார்.

# புதிய குற்றவியல் சட்டங்களில், மாநில அளவில் திருத்தங்கள் செய்ய ஒருநபர் குழு அமைப்பு

சென்னை, ஜூலை 10

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சிகள் சட்டம் ஆகிய சட்டங்கள் நடைமுறையில் இருந்த வந்த நிலையில், ஒன்றிய அரசால் அவை "பாரதிய நியாய சன்ஹிதா, 2023", "பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023" மற்றும் "பாரதிய சாக்ஷியா சட்டம், 2023" என மாற்றப்பட்டு, 17 2024 முதல் இச்சட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.



அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக, சமஸ்கிருதத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, நாடாளுமன்றத்தில், முறையான விவாதங்கள் ஏதுமின்றியும், மாநிலங்களின் கருத்துக்களைக் கேட்காமலும், அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டுள்ள இச்சட்டங்களின் பல்வேறு பிரிவுகளை எதிர்த்து நாடெங்கும் எதிர்ப்புகளும், போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

நாடாளுமன்றத்தில் 146 உறுப்பினர்களை இடைநீக்கம் செய்துவிட்டு, மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளை அறிந்துகொள்ள விருப்பமில்லாமல், ஒன்றிய அரசு அவசர கோலத்தில் இச்சட்டங்களை நாடாளுமன்றத்தில் விவாதங்கள் ஏதுமின்றி, கடந்த 2023ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவேற்றியது.

நாடு முழுவதும் உள்ள பெரும்பான்மையினரின் கருத்தினைப் பிரதிபலிக்கும் வகையில், இந்தப் புதிய சட்டங்களில் என்னென்ன பிரச்சினைகள் உள்ளன என்பதைத் தெளிவாக தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது 17.6.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவுக்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசின் இந்த புதிய சட்டத்தின் சில அடிப்படைப் பிரிவுகளில் தவறுகள் இருப்பதோடு, மாநில அரசுகளிடமிருந்து முழுமையாக கருத்துக்களைப் பெறாமல் இவை இயற்றப்பட்டுள்ளதாக தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்த முதல்அமைச்சர், இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை ஒன்றிய அரசு ஒத்திவைக்க வேண்டும் என்றும், முறையாக அனைத்து மாநில அரசுகளின் கருத்துகளைப் பெற்ற பின்னரே இவ்விஷயத்தில் முடிவெடுக்க வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசின் சார்பில் இப்புதிய சட்டங்களில் என்னென்ன சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில், இன்று (8 72024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தமிழ்நாடு அரசின் தலைமை வழக்குரைஞர், தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர், பொதுத்துறைச் செயலாளர், சட்டத்துறை செயலாளர், காவல்துறை இயக்குநர் மற்றும் அரசு குற்றவியல் வழக்குரைஞர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில், இந்தப் புதிய சட்டங்களில் மாநில அளவில் பெயர் மாற்றம் உட்பட என்னென்ன திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என்பதை ஆராய்ந்து. அரசுக்குப்பரிந்துரைத்திட சென்னை ஐகோர்ட்டு ஓய்வுபெற்ற நீதிபதி எம்.சத்யநாராயணன் தலைமையில் ஒருநபர் குழுவினை அமைத்திட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்கள். இக்குழு இந்தப் புதிய சட்டங்கள் குறித்து தெளிவாக ஆராய்ந்து, மாநில அளவில் வழக்கறிஞர்கள் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் ஆலோசித்து, மாநில அளவில் என்னென்ன திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்பது பற்றிய தனது அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு வழங்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ரவுடிகளை கட்டுப்படுத்துவதே எனது முதல் வேலை: போலீஸ் கமிஷனர் அருண்



சென்னை, ஜூலை 10

பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோரை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. பணியிட மாற்றம் செய்யப்பட்ட சந்தீப் ராய் ரத்தோர் காவலர் பயிற்சி கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதையடுத்து சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி அருண் சென்னை மாநகர போலீஸ் கமிஷனராக நியமனம் செய்யப்பட்டார். இந்த நிலையில் சென்னை காவல்துறையின் புதிய போலீஸ் கமிஷனராக அருண் ஐ.பி.எஸ். பொறுப்பேற்றுக்கொண்டார். சந்தீப் ராய் ரத்தோர் தனது பொறுப்புகளை புதிய காவல் ஆணையர் அருணிடம் ஒப்படைத்தார். சென்னையின் 110வது போலீஸ் கமிஷனராக ஏடிஜிபி அருண் பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டம் ஒழுங்கு ஏடிஜிபியாக டேவிட்சன் தேவாசிர்வாதம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் போலீஸ் கமிஷனர் அருண் கூறியதாவது:

சென்னையில் ரவுடிகளை கட்டுப்படுத்துவதே எனது முதன்மையான பணி. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாக எதை வைத்து சொல்கிறீர்கள். காலம், காலமாக குற்றங்கள் நடந்தே வருகின்றன; அதை தடுத்து கொண்டுதான் இருக்கிறோம். குற்றங்களை தடுப்பதற்கு முன்னுரிமை அளித்து வருகிறோம். சென்னையில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ரவுடிகளுக்கு அவர்கள் மொழியில் பாடம் கற்பிக்கப்படும். சென்னை எனக்கு புதிதல்ல. புள்ளிவிவரங்களை வைத்து பார்க்கும்போது தமிழ்நாட்டில் கொலைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளன. சென்னை போக்குவரத்துகளில் உள்ள சிக்கல்களும் சரிசெய்யப்படும். பொறுப்பை உணர்ந்து காவல்துறையினர் செயல்பட்டால் குற்றங்கள் குறையும். ஆம்ஸ்ட்ராங் வழக்கு பற்றி கருத்து கூற முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

## திமுக ஆட்சியில் பட்டியலின தலைவர்களுக்கும், மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை: எல்.முருகன்

புதுடெல்லி, ஜூலை 10

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை தொடர்பாக டெல்லி பாஜக தலைமையகத்தில் மத்திய இணைமந்திரி எல்.முருகன், பாஜக நிர்வாகிகள் விபி துரைசாமி, கார்த்தியாயினி ஆகியோர் இன்று செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பேசிய மத்திய இணை மந்திரி எல்.முருகன் கூறியதாவது, "தமிழகத்தில் பட்டியலின மக்கள் மீது நிகழ்த்தப்படும் தொடர் வன்முறைகள் தொடர்பாக இன்று தேசிய எஸ்சி ஆணையம் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் சென்று புகார் கொடுக்க உள்ளோம். திமுக ஆட்சிக்கு வந்தபிறகு பட்டியலின மக்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் அதிகமாகியுள்ளன.



ஒவ்வொரு வருடமும் பட்டியலின மக்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக 2000க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகியுள்ளதாக ஒரு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. சென்னையில் இரு தினங்கள்முன்பு பட்டியலின தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டது நம் அனைவருக்கும் தெரியும். இதுதான் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கின் நிலைமை. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் திமுக அரசு படுதோல்வி அடைந்துள்ளது.

பட்டியலின மக்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் தமிழகத்தில் தினம் தினம் அதிகரித்து வருகிறது. திமுக ஆட்சியில் தமிழகத்தில் பட்டியலின தலைவர்களுக்கும், மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை. அவர்கள் தினம் தினம் தீண்டாமையை எதிர்கொள்கின்றனர். சமூக நீதி காவலர்கள் என சொல்லிக்கொள்ளும் திமுக அரசு, அதனை முறையாக பின்பற்றவில்லை. முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இனி சமூக நீதியை பற்றி பேச எந்த தார்மீக உரிமையும் கிடையாது." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தாம்பரம் அடுத்த திருநீர்மலையில் உள்ள பிளாஸ்டிக் குடோனில் பயங்கர தீ விபத்து




சென்னை, ஜூலை 10

சென்னை தாம்பரம் அடுத்துள்ள திருநீர்மலை பகுதியில் தனியாருக்குச் சொந்தமான பிளாஸ்டிக் குடோன் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த குடோனில் நள்ளிரவில் திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. நேற்று இரவு சுமார் 11.30 மணியளவில் குடோனில் இருந்து கரும் புகை வெளியேறி பின்னர் தீயானது மளமளவென எரியத் தொடங்கியுள்ளது.

இதைப் பார்த்த அருகிலுள்ள பொதுமக்கள் உடனடியாக காவல்துறையினர் மற்றும் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தாம்பரம் தீயணைப்புத்துறையினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இருப்பினும் தீ கட்டுக்கடங்காமல் சென்றதையடுத்து, அருகிலுள்ள மற்ற தீயணைப்பு நிலையங்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

இதையடுத்து கிண்டி, சைதாப்பேட்டை, தேனாம்பேட்டை, அசோக் நகர் உள்ளிட்ட தீயணைப்பு நிலையங்களில் இருந்து 10க்கும் மேற்பட்ட வாகனங்களில் வந்துள்ள 50க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் 4 மணி நேரத்திற்கும் மேலாக தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பிளாஸ்டிக் குடோன் தீ விபத்தால் திருநீர்மலை பகுதி முழுவதும் கரும் புகை சூழ்ந்து காற்று மாசு ஏற்பட்டுள்ளது. மின்கசிவு காரணமாக இந்த தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது.

இந்த குடோனில் சுமார் 20க்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள் உள்ளே இருந்துள்ளனர். தீ பரவுவதற்கு முன்பே அவர்கள் உரிய நேரத்தில் வெளியேறியதால் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

# மாணவனுக்கு பாலியல் தொல்லை: டியூசன் ஆசிரியர் போக்சோவில் கைது

ராமேசுவரம், ஜூலை 10

ராமேசுவரம் பகுதியைச் சேர்ந்தவர் ராஜசேகர் (41 வயது). இவர் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவர் வீட்டில் மாணவர்களுக்கு டியூஷன் எடுத்து வந்தார். இந்த நிலையில் டியூசன் படிக்க வந்த 9ம் வகுப்பு மாணவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து மாணவனின் பெற்றோர், போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். இதன் பேரில் போலீசார் நடத்திய விசாரணையில், அந்த ஆசிரியர் மாணவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்தது தெரிய வந்தது. இதையடுத்து அவரை போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து போலீசார் கைது செய்தனர்.

# தண்ணீர் தொட்டியில் வீசி மகளை கொன்ற பெயிண்டர்... அதிர்ச்சியில் மற்றொரு குழந்தையுடன் தாய் தற்கொலை



கோவை, ஜூலை 10

கோவை ஒண்டிப்புதூர் நெசவாளர் காலனி எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்தவர் தங்கராஜ் (40 வயது). பெயிண்டர். இவருடைய மனைவி புஷ்பா (35 வயது). இவர்களுக்கு ஹரிணி (9 வயது), சிவானி (3 வயது) ஆகிய 2 குழந்தைகள் இருந்தனர். தங்கராஜூக்கு மது குடிக்கும் பழக்கம் உள்ளது. கடந்த 4 மாதங்களாக சரிவர வேலைக்கு செல்லாமல் குடிபோதையில் புஷ்பாவிடம் தகராறு செய்து வந்தார்.

அதை அவர் சகித்துக் கொண்டு வீட்டு வேலைக்கு சென்று குடும்பத்தை கவனித்து வந்தார். ஆனால் அவரிடமும் மது குடிக்க பணம் கேட்டு தங்கராஜ் தகராறு செய்து வந்தார். இந்த நிலையில் தங்கராஜ் நேற்று காலை அக்கம்பக்கத்தினரிடம் சென்று, தண்ணீர் தொட்டிக்குள் தனது மனைவி மற்றும் 2 குழந்தைகள் இறந்து கிடப்பதாக தெரிவித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த அக்கம் பக்கத்தினர் விரைந்து வந்து பார்வையிட்டனர்.

அப்போது புஷ்பா மற்றும் 2 குழந்தைகள் தண்ணீரில் மூழ்கி இறந்ததும், அதில் ஹரிணி உடலை மட்டும் தங்கராஜ் வெளியே எடுத்து இருந்ததும் தெரியவந்தது. இதுகுறித்த தகவலின் பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்தனர். பின்னர் தண்ணீர் தொட்டிக்குள் கிடந்த புஷ்பா மற்றும் சிவானி ஆகியோரது உடல்களை வெளியே எடுத்தனர். இதற்கிடையில் தங்கராஜ் எந்த சோகமும் இல்லாமல் இருந்தார். இதனால் சந்தேகம் அடைந்த போலீசார் அவரை பிடித்து கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர்.

விசாரணையின்போது அவர் போலீசில் கூறியதாவது:

குடிபோதையில் நேற்று முன்தினம் இரவு எனது மனைவி புஷ்பாவிடம் தகராறில் ஈடுபட்டேன். இதில் ஆத்திரம் அடைந்த நான், மூத்த மகள் ஹரிணியை வீட்டின் பின்புறம் உள்ள 10 அடி ஆழ தண்ணீர் தொட்டியில் வீசி கொலை செய்தேன்.

அவளை காணாமல் தேடிய புஷ்பா, தண்ணீர் தொட்டிக்குள் மகள் பிணமாக கிடப்பதை கண்டு கதறி அழுதார். அத்துடன் 2வது மகள் சிவானியை அதே தண்ணீர் தொட்டியில் வீசி கொலை செய்துவிட்டு, தானும் குதித்து தற்கொலை செய்துகொண்டார். குடிபோதையில் இருந்ததால் கண்டு கொள்ளாமல் வீட்டில் அப்படியே படுத்து தூங்கி விட்டேன். மறுநாள் காலையில் எழுந்து பார்த்தபோது, 3 பேரும் தண்ணீர் தொட்டிக்குள் பிணமாக கிடந்தனர்.

அவர் மீது கொலை, தற்கொலைக்குதூண்டுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிந்து போலீசார் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

# குடும்ப தகராறில் மனைவிக்கு அரிவாள் வெட்டு விசாரணைக்கு பயந்து கணவன் தீக்குளித்து தற்கொலை

மதுரை, ஜூலை 10

மதுரை செல்லூர் 50 அடி சாலை பகுதியைச் சேர்ந்தவர் சம்சுதீன் (42 வயது). இவருடைய மனைவி செய்யது அலி பாத்திமா (38 வயது). இவர்களுக்கு ஒரு மகள் உள்ளார். இந்த நிலையில், சம்சுதீன் சரிவர வேலைக்கு செல்லாமல் இருந்துள்ளார். இதன் காரணமாக கணவன் மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதில் ஆத்திரம் அடைந்த சம்சுதீன், வீட்டில் இருந்த அரிவாளால் மனைவியை வெட்டி உள்ளார். இதில் பாத்திமாவுக்கு காயம் ஏற்பட்டது. அவரது அலறல் கேட்டு அக்கம்பக்கத்தினர் அங்கு ஓடி வந்தனர்.

செய்யது அலி பாத்திமாவை மீட்டு, மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையே, போலீசார் வந்து தன்னிடம் விசாரணை நடத்திவிடுவார்களோ என்ற அச்சத்தில் இருந்த சம்சுதீன், வீட்டில் இருந்த பெட்ரோலை எடுத்து உடலில் ஊற்றி தீக்குளித்தார். இதில் அவர் உடல் கருகி பரிதாபமாக இறந்தார்.

இதுகுறித்து அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த செல்லூர் போலீசார், சம்சுதீன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். முதற்கட்ட விசாரணை குறித்து போலீசார் கூறியதாவது:

சம்சுதீனுக்கு ஏற்கனவே திருமணமாகி உள்ளது. மனைவியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்தார். இதற்கிடையே, அவருக்கும், விவாகரத்து பெற்று வாழ்ந்த செய்யது அலி பாத்திமாவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து அவர்கள் இருவரும் திருமணம் செய்துள்ளனர்.

மது குடித்துவிட்டு வந்து மனைவியுடன் தகராறு செய்வதை சம்சுதீன் வழக்கமாக கொண்டிருந்தார். மனைவி நடத்தையின் மீதும் அவருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த காரணத்தினால் மனைவியை கொல்ல முயன்றதாக தெரிகிறது. காயங்களுடன் செய்யது அலி பாத்திமா சிகிச்சை பெற்று வருகிறார். போலீஸ் விசாரணைக்கு பயந்து, சம்சுதீன் தீக்குளித்து தற்கொலை செய்திருக்கலாம். இவ்வாறு போலீசார் கூறினர்.

இந்த சம்பவம் மதுரையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சிறுமிகள் உட்பட 7 பேருக்கு எலி காய்ச்சல் பாதிப்பு

கள்ளக்குறிச்சி, ஜூலை 10

கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் அருகே வடதொரசலூர் கிராமம் அமைந்துள்ளது. இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் வசித்து வருகின்றனர். அந்த கிராமத்தில் உள்ள மூப்பனார் கோவில் தெருவில் வசித்து வரும் பொதுமக்கள் சிலருக்கு திடீரென வாந்தி, மயக்கம் மற்றும் லேசான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அனைவரும் தியாகதுருகம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் 7 பேர் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர்களுக்கு ரத்தப் பரிசோதனை செய்த போது, எலி காய்ச்சல் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது தெரிய வந்தது. குடிநீர் மூலம் ஏற்பட்ட தொற்று காரணமாக இவர்களுக்கு எலி காய்ச்சல் பரவியது தெரிய வந்துள்ளது. இதனால் அக்கிராமத்தை சேர்ந்த மேலும் பலருக்கு நோய் பரவி இருக்கக்கூடிய அபாயம் இருப்பதாக அச்சம் ஏற்பட்டது.

இதையடுத்து வடதொரசலூர் கிராமத்தில் சிறப்பு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு, மருத்துவர்கள் தீவிர கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் ஊராட்சி நிர்வாகம் சார்பில் கிராமம் முழுவதும் தூய்மைப்படுத்தும் பணியும், கிருமிநாசினி தெளிக்கும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரம் தொடர்பாக மேலும் ஒருவர் கைது

கள்ளக்குறிச்சி, ஜூலை 10

கள்ளக்குறிச்சி கருணாபுரம், மாதவச்சேரி, சேஷசமுத்திரம் ஆகிய பகுதிகளில் விஷ சாராயம் குடித்து 65 பேர் பலியானார்கள். மெத்தனால் கலந்த சாராயத்தை குடித்ததால் அவர்கள் இறந்ததாக கூறப்பட்டது. பின்னர் சி.பி.சி.ஐ.டி. போலீசார் நடத்திய விசாரணையில் தண்ணீரில் கலந்த மெத்தனால் என்பது தெரியவந்தது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் போலீசார் தீவிர சாராய வேட்டை நடத்தி வியாபாரிகளை கைது செய்து வருகின்றனர். அதேபோல் கள்ளச்சாராயம் காய்ச்சப்படும் கல்வராயன் மலையில் போலீசார் முகாமிட்டு சாராய வியாபாரிகளை கைது செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில், கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரம் தொடர்பாக மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த வேலு என்பவரை சிபிசிஐடி போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கைது செய்யப்பட்டுள்ள வேலு, மாதேஷிடம் விஷ சாராயம் வாங்கி சேஷசமுத்திரம் பகுதியில் விற்பனை செய்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. விஷ சாராய வழக்கில் இது வரை 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# பெற்றோர் எதிர்ப்பை மீறி காதல் திருமணம் செய்த கல்லூரி மாணவி.. அடுத்து நடந்த பரபரப்பு

சேலம், ஜூலை 10

சேலம் அஸ்தம்பட்டி பகுதியை சேர்ந்த 20 வயதான வாலிபர் ஒருவர், தனியார் கல்லூரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் 3ம் ஆண்டு படித்து வருகிறார். இவரும், சின்ன திருப்பதியில் வசித்து வரும் இளம்பெண் ஒருவரும் கடந்த சில ஆண்டுகளாக காதலித்து வந்தனர். அந்த பெண் சேலத்தில் உள்ள ஒரு கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். இவர்களது காதல் விவகாரம் இருவீட்டாரின் பெற்றோருக்கு தெரியவந்ததால் அவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனிடையே, காதல் ஜோடியினர் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து இருவரும் வீட்டை விட்டு வெளியேறினர். பின்னர் அவர்கள் அரியானூரில் உள்ள ஒரு கோவிலில் வைத்து திருமணம் செய்து கொண்டனர். அதேசமயம், கல்லூரிக்கு சென்ற மகளை காணவில்லை என்று அவரது பெற்றோர் தரப்பில் கன்னங்குறிச்சி போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மாயமான கல்லூரி மாணவியை தேடி வந்தனர். இந்நிலையில், காதல் திருமணம் செய்த ஜோடியை நேற்று அஸ்தம்பட்டி போலீசார் விசாரணைக்காக போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். பின்னர் அவர்கள் கன்னங்குறிச்சி போலீஸ் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதையடுத்து அங்கு இருவீட்டாரின் பெற்றோரை போலீசார் வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, பெற்றோருடன் செல்வதற்கு கல்லூரி மாணவி மறுப்பு தெரிவித்ததால் அவரை அடிவாரம் பகுதியில் உள்ள ஒரு காப்பகத்தில் போலீசார் இருக்குமாறு தெரிவித்தனர்.

இது ஒருபுறம் இருக்க, மாணவியை திருமணம் செய்த கல்லூரி மாணவருக்கு சிலர் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இது குறித்து அவர் அஸ்தம்பட்டி போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் கல்லூரி மாணவருக்கு கொலைமிரட்டல் விடுத்த நபர்கள் குறித்து விசாரித்து வருகின்றனர். மேலும், காதல் திருமணம் செய்த அந்த பெண்ணுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். இதையடுத்து காதல் திருமணம் செய்த கல்லூரி மாணவன் மற்றும் மாணவி ஆகியோரின் வீட்டுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# தாயுடன் உல்லாசமாக இருந்த கள்ளக்காதலனை அடித்துக்கொன்ற மகன்.. ஈரோட்டில் பரபரப்பு



ஈரோடு, ஜூலை 10

ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே உள்ள தலமலை வனச்சரகத்துக்குட்பட்ட தொட்டாபுரம் வனப்பகுதியில் கடந்த 26ந் தேதி தலமலை வனத்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த பகுதியில் துர்நாற்றம் வீசியது. உடனே அங்கு சென்று பார்த்தபோது ஒரு சாக்கு மூட்டை கிடந்தது.

பின்னர் இதுகுறித்து ஆசனூர் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். அதன் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் செல்வம் (பொறுப்பு) மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அந்த சாக்கு மூட்டையை எடுத்து பிரித்து பார்த்தனர். அதில் மனித எலும்புக்கூடுகள் இருந்தது. இதைத் தொடர்ந்து அவற்றை கைப்பற்றிய போலீசார் ஆய்வுக்காக சென்னையில் உள்ள பரிசோதனை கூடத்துக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து போலீசார், சாக்கு மூட்டையில் கிடந்த மனித எலும்புக்கூடுகள் யாருடையது? மர்ம நபர்கள் யாரையாவது கொலை செய்து அதை சாக்குமூட்டையில் கட்டி வனப்பகுதியில் வீசிவிட்டு சென்றனரா? போன்ற கோணங்களில் விசாரணை நடத்தி வந்தனர்.

இதற்கிடையே கடந்த மே மாதம் 27ந் தேதி தொட்டாபுரம் கிராமத்தை சேர்ந்த தொழிலாளி குமார் (வயது 41) என்பவரை காணவில்லை என அவருடைய உறவினர்கள் ஆசனூர் போலீசில் புகார் அளித்திருந்தனர். இதையடுத்து போலீசார் வனப்பகுதியில் எலும்புக்கூடாக கிடந்தவர் காணாமல் போன குமாராக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணையை முடுக்கிவிட்டனர்.

விசாரணையில் தலமலை வனப்பகுதியில் சாக்கு மூட்டையில் கிடந்தது குமாரின் எலும்புக்கூடுகள் என்பதும், அவரை யாரோ கொலை செய்து உடலை சாக்குமூட்டையில் கட்டி வனப்பகுதியில் வீசிச்சென்றதும் தெரிய வந்தது. அதைத்தொடர்ந்து போலீசார் தீவிர விசாரணையில் இறங்கினர். இந்த நிலையில் கடந்த 5ந் தேதி திடீர்திருப்பமாக தொட்டாபுரத்தை சேர்ந்த தொழிலாளி நாகமல்லு (வயது 24) என்பவர் குமாரைதான் கொலை செய்ததாக கூறி தலமலை கிராம நிர்வாக அலுவலர் தம்புராஜிடம் சரணடைந்தார். பின்னர் அவர் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அதைத்தொடர்ந்து நாகமல்லு போலீசாரிடம் அளித்த பரபரப்பு வாக்குமூலம் குறித்த விவரம் வருமாறு:

நானும், எனது தாய் முத்துமணியும் (43) தொட்டாபுரம் தோட்டத்து வீட்டில் வசித்து வருகிறோம். என்னுடைய தந்தை ராமசாமி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் என் தாய்க்கும், எங்கள் பகுதியில் வசித்த குமாருக்கும் கடந்த சில ஆண்டுகளாக கள்ளத்தொடர்பு இருந்தது. இதை அறிந்து அவரை நான் எச்சரித்தேன். ஆனால் அவர் என் தாயுடனான கள்ளத் தொடர்பை கைவிடவில்லை. இந்தநிலையில் நான் கடந்த மே மாதம் 27ந் தோட்டத்தில் இருந்து வீட்டுக்கு வந்தேன். அப்போது குமாரும், எனது தாயும் அங்கு தனிமையில் உல்லாசமாக இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தேன்.

உடனே குமாரைபிடித்து போலீசில் ஒப்படைக்க கயிற்றால் கட்டிவைத்திருந்தேன். அப்போது குடிபோதையில் இருந்த அவர் என்னை தகாத வார்த்தையில் திட்டிக்கொண்டே இருந்தார். இதனால் ஆத்திரம் அடைந்த நான் அருகே கிடந்த சுத்தியலை எடுத்து குமாரின் தலையில் ஓங்கி அடித்தேன். இதில் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துவிட்டார்.

இதைத்தொடர்ந்து கொலையை மறைக்க எண்ணி என்னுடைய பெரியப்பா மகன் மாதேவனை (21) துணைக்கு அழைத்தேன். பின்னர் 2 பேரும் சேர்ந்து குமார் உடலை மறைக்க திட்டம் தீட்டினோம். வனப்பகுதியில் உடலை வீசிவிட்டால் வனவிலங்குகள் தின்றுவிடும். நான் தப்பித்துக் கொள்ளலாம் என நினைத்து உடலை சாக்கு மூட்டையில் கட்டி அடர்ந்த வனப்பகுதிக்கு சென்று உடல் இருந்த மூட்டையை வீசிவிட்டு வீட்டுக்கு வந்து விட்டோம். யாரும் எங்களை கண்டுபிடிக்கவில்லை என நினைத்து கொண்டிருந்தோம்.

ஆனால் கடந்த ஜூன் மாதம் 26ந் தேதி வனத்துறையினர் ரோந்து சென்றபோது சாக்கு மூட்டையில் இருந்த எலும்புக்கூடுகளை எடுத்து விசாரணை நடத்தி வந்தனர். இதுகுறித்து அறிந்த நான் இனி போலீசார் என்னைபிடித்து விடுவார்கள் என பயந்து கிராம நிர்வாக அலுவலரிடம் சரணடைந்தேன். இவ்வாறு அவர் வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

இதையடுத்து நாகமல்லுவை போலீசார் கைது செய்தனர். மேலும் கொலையை மறைத்ததாக முத்துமணியும், உடலை மறைக்க உடந்தையாக இருந்ததாக மாதேவனும் கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவம் தாளவாடி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# செங்கல்பட்டில் பள்ளி முடிந்து வெளியே வந்த சிறுவன், சிறுமி காரில் கடத்தல்

செங்கல்பட்டு, ஜூலை 10

செங்கல்பட்டு அருகே உள்ள ஒழலூரில் அரசு நடுநிலைப் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியில் அப்பகுதியை சேர்ந்த ஏராளமான மாணவ மாணவிகள் பயின்று வருகிறனர்.

இந்த நிலையில் பள்ளியில் இருந்து வீட்டிற்கு செல்வதற்காக வெளியே வந்த மாணவி மற்றும் மாணவர் என இரண்டு பேர் காரில் கடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

வேலன் என்பவரது மகன் மற்றும் மகளை காரில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் கடத்திச் சென்றதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து தகவல் அறிந்த செங்கல்பட்டு தாலுகா போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பள்ளி ஆசிரியர்களிடம் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் ஆசிரியர்கள் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடத்தப்பட்ட 2 பேரை மீட்கும் பணியில் போலீசார் தீவிரம் காட்டி வருகின்றனர்.

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒழலூர் பகுதியை சேர்ந்த ஆட்டோஓட்டுநர் வேலன் (31) இவருக்கு ஆர்த்தி (30) என்கிற மனைவியும் ரக்சதா (11) என்கிற மகளும் வயது, நித்தின் (7) என்கிற மகனும் உள்ளனர். கடந்த ஓர் ஆண்டுகளுக்கு முன்பு வேலன் மற்றும் ஆர்த்தி ஆகிய இருவரும் குடும்ப பிரச்சினையின் காரணமாக தனித்தனியாக வாழ்ந்து வருகிறனர்.

செங்கல்பட்டில் பள்ளி மாணவர்கள் காரில் கடத்தப்பட்ட சம்பவம் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# மூதாட்டியின் உடலை மயானத்திற்கு தூக்கிச்சென்ற பெண்கள்



திருப்பூர், ஜூலை 10

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மெட்ரோ சிட்டியை சேர்ந்தவர் வக்கீல் கிருஷ்ணகுமார். இவரது பெரியம்மா இந்திராணி (வயது 83). வயது மூப்பின் காரணமாக இவர் கடந்த 5ந் தேதி காலமானார். இதையடுத்து இவருடைய உடலுக்கு திராவிட கழகத்தை சேர்ந்த ஏராளமான பெண்கள் அஞ்சலி செலுத்தியதோடு இறுதி சடங்குகளுக்காக மூதாட்டியின் உடலை மின் மயானத்திற்கு எடுத்துச் செல்வதற்காக தயாராகினர்.

பின்னர் திராவிட கழகத்தைச் சேர்ந்த பெண்கள் ஏராளமானோர் மூதாட்டி உடலை வீட்டிற்கு வெளியே கொண்டு வந்தனர். பின்னர் அங்கிருந்து ஆம்புலன்சில் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மின்மயானத்திற்கு கொண்டு சென்றனர். மேலும் மின் மயானத்தில் இருந்து மூதாட்டி உடலை ஆம்புலன்ஸ் வாகனத்திலிருந்து எரியூட்டும் மையம் வரை எடுத்துச் சென்று மின் மயானத்தில் உடலை வைத்து எரியூட்டினர். வழக்கமாக மின் மயானத்திற்கு ஆண்கள் மட்டுமே அதிக அளவில் சென்று இறந்தவர்களின் இறுதிச்சடங்கை செய்வார்கள். ஆனால் உயிரிழந்த மூதாட்டி உடலை வீட்டில் இருந்து மின் மயானம் வரை கொண்டு சென்று இறுதி சடங்குகள் செய்து, மின்மயானத்தில் எரியூட்டும் வரை காத்திருந்து ஆண்கள் செய்யும் நடைமுறை வழக்கத்தை மாற்றி உள்ளனர்.

# ஆம்ஸ்ட்ராங் குடும்பத்தினருக்கு பாஜக தலைவர் அண்ணாமலை ஆறுதல்



சென்னை, ஜூலை 10

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்தவர் ஆம்ஸ்ட்ராங் (52). இவர் கடந்த 5ம் தேதி இரவு பெரம்பூர் வேணுகோபால் சாமி கோவில் தெருவில் உள்ள அவரது வீட்டின் முன்பு மர்ம கும்பலால் வெட்டி கொலை செய்யப்பட்டார். உணவு வினியோகம் செய்யும் ஊழியர்கள் போல் உடை அணிந்து வந்த கும்பல் சரமாரியாக வெட்டி கொலை செய்து விட்டு தப்பியது. கொலையாளிகள் தப்பிச்செல்லும் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

அதை அடிப்படையாக வைத்து செம்பியம் போலீசார் 10 தனிப்படைகளை அமைத்து துப்பு துலக்கினர். இந்த கொலை வழக்கில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். போலீசாரின் முதல்கட்ட விசாரணையில், ஆற்காடு சுரேஷ் கொலைக்கு பழிக்குப்பழியாக ஆம்ஸ்ட்ராங் கொலை செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. மேலும், கொலைக்கு அரசியல் காரணங்கள் எதுவும் இல்லை என போலீசார் தெரிவித்தனர்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. அவர்களை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். உண்மைநிலை வெளியே வர வேண்டும் என்றால் சிபிஐ விசாரணைக்கு ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை மாற்ற வேண்டும் என அவருடைய ஆதரவாளர்கள், பல்வேறு கட்சி நிர்வாகிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், படுகொலை செய்யப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங்கின் இல்லத்திற்கு தமிழக பாஜகதலைவர் அண்ணாமலை நேரில் சென்று அவரது உருவப்படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் ஆம்ஸ்ட்ராங்கின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

# 12ந் தேதி திருமணம்: அழைப்பிதழ் கொடுக்க சென்ற புதுமாப்பிள்ளைக்கு நேர்ந்த சோகம்



கள்ளக்குறிச்சி, ஜூலை 10

கள்ளக்குறிச்சி அருகே தச்சூர் கிராமத்தை சேர்ந்தவர் அய்யாவு மகன் சிவக்குமார் (வயது 27). கொத்தனாரான இவருக்கும் கச்சிராயப்பாளையம் பகுதியை சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் வருகிற 12ந் தேதி திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டு அதற்கான அழைப்பிதழ்களை உறவினர்கள் நண்பர்களுக்கு கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் சிவக்குமார் நேற்று முன்தினம் தனது உறவினர் வீட்டிற்கு திருமண அழைப்பிதழ் கொடுப்பதற்காக வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் உலகங்காத்தான் கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தார். சேலம் மெயின் ரோட்டில் உள்ள தனியார் அரிசி ஆலை அருகே வந்த போது முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதாமல் இருப்பதற்காக சிவக்குமார் திடீரென பிரேக் பிடித்தார். அப்போது அவர் நிலைத்தடுமாறி மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி கீழே விழுந்தார்.

இதில் தலையில் பலத்த காயம் அடைந்த அவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலன் இன்றி அவர் பரிதாபமாக இறந்தார். இது குறித்த புகாரின் பேரில் கள்ளக்குறிச்சி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

வருகிற 12ந் தேதி தனக்கு திருமணம் நடைபெற இருந்த நிலையில் உறவினர் வீட்டு'க்கு அழைப்பிதழ் கொடுக்க செல்லும் வழியில் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து கொத்தனார் பலியான சம்பவம் தச்சூர் கிராமத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல் இந்த சம்பவத்தை அறிந்து பெண் வீட்டாரும் சோகத்தில் மூழ்கி உள்ளனர்.

# அறையில் தண்ணீர் பிடித்து வைப்பதில் தகராறு: நண்பரை கொன்ற வாலிபர் கைது

திருப்பூர், ஜூலை 10

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை திருவே கம்பத்து பகுதியை சேர்ந்தவர் ஆனந்தராஜ் (வயது 29). திருப்பூர் கொங்கு மெயின் ரோடு திருநீலகண்டபுரம் பகுதியில் உள்ள நூல் கடையில் ஆட்டோ டிரைவராக வேலை செய்து வந்தார். அதே கடையில் மற்றொரு வாகனத்தின் டிரைவராக காரைக்குடியை சேர்ந்த வசந்த் (24) என்பவர் பணியாற்றி வருகிறார். இவர்களுடன் மேலும் 4 பேர் என 6 பேரும் திருநீலக ண்டபுரத்தில் ஒரே அறையில் தங்கி உள்ளனர்.

ஆனந்தராஜ் மற்றும் வசந்த் இருவருக்கும் அறையில் தண்ணீர் பிடித்து வைப்பதில் அவ்வப்போது தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. விடுமுறை நாளான நேற்று இருவரும்மது போதையில்இருந்தபோதுதண்ணீர்பிடிக்காமல் இருந்துள்ளனர். ஆனந்தராஜ் தண்ணீர் பிடித்து வைக்க வேண்டும். ஆனால் அவர் தண்ணீர் பிடித்து வைக்காததால் ஆத்திரமடைந்த வசந்த், ஆனந்தராஜுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

தங்கி இருந்த அறைக்கும் முன்பு இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது வசந்த், வீட்டில் இருந்த கத்தியை எடுத்து ஆனந்தராஜின் நெஞ்சு மற்றும் வயிறு பகுதிகளில் சரமாரியாக குத்தியதாக தெரிகிறது. இதில் பலத்த காயமடைந்த ஆனந்தராஜ் தனது ஆட்டோவை நோக்கி சென்று நடுரோட்டில் சரிந்து விழுந்து இறந்தார். இதைக்கண்ட பொதுமக்கள் உடனடியாக வடக்கு போலீசாருக்கு தகவல் தெரிவித்த னர். சம்பவ இடத்துக்கு மாநகர துணை போலீஸ் கமிஷனர் ராஜராஜன், உதவி கமிஷனர் அனில்குமார் உள்ளிட்டோர் விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர். அருகில் இருந்த கடையின் கண்காணிப்பு கேமரா பதிவுகளை கைப்பற்றினர்.

தொடர்ந்து அக்கம்,பக்கத்தினரிடம் விசாரணை மேற்கொண்டனர். உடனடியாக போலீசார் துரிதமாக செயல்பட்டு வசந்த்தை மடக்கிப்பிடித்து கைது செய்தனர். வசந்தை வடக்கு போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று விசாரணை மேற்கொண்டனர். ஆனந்தராஜின்உடலைகைப்பற்றிதிருப்பூர்அரசுமருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். தண்ணீர் பிடித்து வைப்பதில் ஏற்பட்ட தகராறில் ஒரே அறையில் இருந்த நண்பனை கத்தியால் குத்தி வாலிபர் கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னையில் யூடியூபர்களை மிரட்டிய விவகாரம் 3 பேர் கைது



சென்னை ஜூலை 10

சென்னை ரிச்சி ஸ்ட்ரீட் பகுதியில் யூடியூபர்கள் 2 பேர் மின்னணு பொருட்கள் வாங்குவது குறித்து தங்கள் யூடியூபிற்காக, வீடியோக்களை எடுத்து வந்தனர். அந்த சாலையில் மதுக்கடை திறப்பதற்கு முன்பாகவே, மது பானங்களுடன் இருந்த சிலர், சாலையோரம் நின்று கொண்டிருந்த ஆட்டோவில் அமர்ந்து மது அருந்தியுள்ளனர்.

போதையில் இருந்த அவர்கள், தங்களை வீடியோ எடுப்பதாக தவறாக நினைத்துக் கொண்டு அந்த யூடியூபர்களை மடக்கிப் பிடித்து கேமரா, செல்போன்களை பிடுங்கி ரகளையில் ஈடுபட்டனர். அவர்களிடம் ஆயுதம் இருந்ததால் உயிர் பிழைத்தால் போதும் என்று அந்த யூடியூபர்கள் தப்பித்து வந்துள்ளனர்.

100 மீட்டர் இடைவெளியில் போலீசாரின் புறக்காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், சாலைக்கு மறுபுறம் துணை ஆணையர் அலுவலகம் இருந்த போதிலும், பட்டப் பகலில் சாலையில் நடந்து சென்றவர்களை போதை ஆசாமிகள் தகாத வார்த்தைகளால் திட்டியதுடன், கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளத்தில் வேகமாக பரவி வருகிறது.

இந்த நிலையில், யூடியூபர் நந்தா என்பவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக 3 பேரை சிந்தாதிரிப்பேட்டை போலீசார் கைது செய்துள்ளனர். சென்னை பெரம்பூரைச் சேர்ந்த ஸ்ரீதர், பார்த்திபன், கிஷோர் ஆகிய மூன்று பேரை கைதுசெய்துள்ள போலீசார், அவர்களிடம் விசாரித்து வருகின்றனர்.

# அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதான குட்கா முறைகேடு வழக்கு சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றம்



சென்னை, ஜூலை 10

தமிழகத்தில் தடையை மீறி அதிகாரிகளுக்கு லஞ்சம் அளித்து குட்கா பொருள்கள் விற்கபடுவதாக புகாரில் சிபிஐ காவல்துறை வழக்கை விசாரித்து வருகின்றது.

இதில் மாதவராவ், சீனிவாசராவ், உமாசங்கர் குப்தா, உணவு பாதுகாப்புத்துறை அதிகாரி செந்தில்முருகன், மத்திய கலால்துறை அதிகாரி நவநீத கிருஷ்ண பாண்டியன், சுகாதாரத்துறை அதிகாரி சிவக்குமார் ஆகிய 6 பேர் மீது வழக்கு பதிவு செய்த சிபிஐ, இவர்களுக்கு எதிரான சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இந்நிலையில் முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி. ரமணா முன்னாள், சென்னை காவல்துறையின் முன்னாள் ஆணையர் உள்ளிட்ட மத்திய, மாநில அரசு உயர் அதிகாரிகள் எதிராக கூடுதல் குற்றபத்திரிகை கடந்த மே மாதம் தாக்கல் செய்தது. இந்த வழக்கு சிபிஐ நீதிமன்ற நீதிபதி ஏழில் வளவன் முன் இன்று மீண்டும் விசாரணைக்கு

அப்போது வழக்கில் முன்னாள் மற்றும் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளதால் வழக்கு விசாரணை எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றி நீதிபதி உத்தரவிட்டார். அத்துடன், விசாரணையை ஆகஸ்ட் 2 தேதிக்கு தள்ளி வைத்தார்.

# தமிழகத்தில் அரசியல் கட்சி தலைவர்களுக்கு பாதுகாப்பு இல்லை: எடப்பாடி பழனிசாமி



சேலம், ஜூலை 10

சேலத்தில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீரழிந்துவிட்டது. தமிழ்நாடு முழுவதும் நிர்வாகத்திறனற்ற ஆட்சி நடக்கிறது. தமிழகத்தில் பொது மக்கள், பெண்கள், அரசியல்கட்சிதலைவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. தமிழ்நாட்டில் கொலைகள் நடக்காத நாட்களே இல்லை.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின் காவல்துறை அதிகாரிகளுக்கு முழுமையான சுதந்திரம் கிடையாது. அதிகாரிகளை மாற்றுவதால் சட்டம்ஒழுங்கு சீராகி விடாது. திட்டமிட்டுதான் ஆம்ஸ்ட்ராங் கொலை நடந்துள்ளதாக சொல்லப்படுகிறது. கொலை வழக்கில் சரணடைந்தவர்கள் உண்மையானவர்கள் அல்ல, அவர்கள் போலி குற்றவாளி. எந்தெந்த துறையில் கொள்ளையடிக்கலாம் என்பதுதான் இந்த ஆட்சியின் திட்டம். அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டவர் ஓ.பன்னீர் செல்வம். எனவே அவரை பற்றி பேச ஒன்றுமில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: பாமகவின் வெற்றியே தமிழ்நாட்டு மக்களின் வெற்றி ராமதாஸ்



சென்னை, ஜூலை 10

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

"ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் கவனத்தையும் ஈர்த்துள்ள விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கான தேர்தல் பரப்புரை இன்று மாலையுடன் நிறைவடைகிறது. நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், தமிழ்நாட்டில் ஜனநாயகத்தையும், சமூகநீதியையும் நிலைநிறுத்த விக்கிரவாண்டி மக்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் திமுகவுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்? என்று கேட்டால், ஒரு காரணத்தைக்கூட அக் கட்சியினரால் கூற முடியாது.ஆனால்,திமுகவுக்கு ஏன் வாக்களிக்கக் கூடாது என்பது ஆயிரம் காரணங்களை என்னால் பட்டியலிட முடியும். அவற்றில் சிலவற்றை மட்டும் விக்கிரவாண்டி தொகுதி மக்களின் பார்வைக்காகவும், ஆய்வுக்காகவும் இங்கு முன்வைக்க நான் விரும்புகிறேன்.

1.தமிழ்நாட்டில்சட்டம் & ஒழுங்கை பாதுகாக்கத் தவறியது. பட்டியலினத்தைச் சேர்ந்த பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதியில் வெட்டிக் கொல்லப் படும் அளவுக்கு தமிழகத்தில் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை நிலவுவது.

2. சாதாரண மக்களால் வாழ்க்கை நடத்த முடியாத அளவுக்கு உயர்ந்திருக்கும் விலைவாசியை கட்டுப்படுத்தாதது.

3 . நியாயவிலைக்கடைகளில் மக்களின் அடிப்படைத் தேவையானதுவரம் பருப்பு, பாமாயில் ஆகிய வற்றைக் கூட கடந்த 3 மாதங்களாக வழங்க முடியாத அவல நிலையை ஏற்படுத்தியது.

4. தமிழக அரசுக்கு அதிகாரம் இருந்தும் சமூகநீதியை நிலைநாட்ட சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த மறுப்பது.

5. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால் சமூக நீதி விவகாரத்தில் திமுக செய்த தில்லுமுல்லுகள் அம்பலமாகிவிடும் என்பதற்காக 69% இட ஒதுக்கீட்டையே காவு கொடுக்கத் துணிந்திருப்பது.

6.தமிழ்நாட்டில் வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து இரண்டரை ஆண்டுகள் ஆகியும், வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்காமல் ஏமாற்றுவது.

7. 2019ஆம் ஆண்டு விக்கிரவாண்டியில் இடைத்தேர்தலின்போது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வன்னியர்களுக்கு 15% இடஒதுக்கீடு வழங்குவோம் என்று கூறி இது வரை வழங்காமல் ஏமாற்றுவது.

8. தமிழ்நாட்டில் பட்டியலின மக்களின் மக்கள் தொகை கிட்டத்தட்ட 22% ஆக அதிகரித்துள்ள நிலையில், அதற்கு இணையாக அவர்களுக்கான இட ஒதுக்கீட்டை அதிகரிக்க மறுப்பது.

9. விக்கிரவாண்டி தொகுதியில் 3 ஆண்டுகளில் எந்த வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தாதது.

10. விக்கிரவாண்டியில் அரசு கல்லூரி வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை நிறைவேற்றாதது.

11. நந்தன் கால்வாய்த் திட்டத்தை செயல்படுத்தாதது.

12. தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு 5.50 லட்சம் அரசு வேலைகளை வழங்காதது. 13. தமிழர்களுக்கு மட்டுமே வேலை வழங்குவதற்கான சட்டத்தை கொண்டு வராமல் தமிழ்நாட்டின் வேலைவாய்ப்புகளைவட மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு தாரை வார்ப்பது.

14. அரசு பள்ளிகளில் ஒன்றரை லட்சம் ஆசிரியர் பணியிடங்களை நிரப்பாமல் வைத்திருப்பது.

15. அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த மறுப்பது.

திமுக அரசின் வேதனைப் பட்டியல் இன்னும் நீண்டது ஆகும். அவற்றை பட்டியலிட பக்கங்கள் போதாது. விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சியின் வெற்றி என்பது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் வெற்றி, ஜனநாயகத்தின் வெற்றி, சமூகநீதியின் வெற்றி. எனவே, தமிழ் நாடு நலம் பெற, சமூகநீதி தழைக்க நாளை மறுநாள் நடைபெறவுள்ள விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தலில் பா.ம.க வேட்பாளர் சி.அன்புமணிக்கு மாம்பழம் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று விக்கிரவாண்டி மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காதலியை திருமணம் செய்த 2 நாளில் வங்கி ஊழியர் தற்கொலை



ஆரணி, ஜூலை 10

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த சதுப்பேரிபாளையம் ஊராட்சிக்குஉட்பட்ட சொரக்காபாளையம் கிராமத்தைச் சேர்ந்த தமிழரசன் மகன் அஜித் (வயது 23). விவசாயியான தமிழரசன் பைனான்சும் நடத்தி வருகிறார். மகன் அஜித் ஆரணி சூரியகுளம் அருகே உள்ள தனியார் வங்கியில் பணியாற்றி வந்தார்.

இவருக்கும் சென்னை ஒடக்கரம் பகுதியில் தனியார்நிறுவனத்தில்வேலை செய்து வரும் ஊட்டியை சேர்ந்த ஜான்சன் மகள் ராதிகா என்ற பெண்ணுக்கும் ஏற்பட்ட பழக்கம் காதலாக மாறியது. கடந்த 3ந் தேதி ராதிகாவை அஜித் தனது வீட்டிற்கு அழைத்து வந்தார். பின்னர் மகன் அஜித்துக்கும் ராதிகாவிற்கும் குலதெய்வமான தச்சரம்பட்டு பகுதியில் உள்ள நரசிம்மர் கோவிலில் தமிழரசன் திருமணம் செய்து வைத்தார்.

அதைத்தொடர்ந்து 5ந் தேதி காலையில் பதிவு திருமணம்செய்துகொள்ள விசாரித்து விட்டு வருவதாக அஜித் தனியாக சென்றார். ஆனால் அதன் பிறகு அவர் வீடு திரும்பவில்லை. பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்காத நிலையில் அது குறித்து ஆரணி தாலுகா போலீசில் தமிழரசன் புகார் அளித்தார். அதன் பேரில் ஆரணி தாலுகா போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மகாராணி வழக்குப் பதிவு செய்து தேடி வந்தார்.

இந்த நிலையில் போளூரிலிருந்து ஜமுனாமரத்தூர் செல்லும் சாலையில் அத்திமூரை அடுத்த வதியன் கொட்டாய் காட்டுப்பகுதியில் வாலிபர் ஒருவர் பிணம் மரத்தில் தொங்குவதாக தகவல் கிடைத்தது. உடலை போளூர் போலீசார் கைப்பற்றி விசாரணை நடத்தினர். மேலும் மாயமான அஜித்தின் படத்தை ஆரணிபோலீசார்அனுப்பி விசாரித்ததில் தற்கொலை செய்து கொண்டது அஜித் என்பது தெரியவந்தது.

காதலியை கரம்பிடிக்க உறுதியாக இருந்த அஜித் அவரையே திருமணம் செய்த இரண்டே நாட்களில் தற்கொலை செய்து கொண்டது மனைவியை புரியாததால் ஏற்பட்ட பிரச்சினையா அல்லது கடன் பிரச்சனையா, நண்பர்களால் ஏற்பட்ட தகராறா என பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தையும், பரபரப்பையும், ஏற்படுத்தி உள்ளது.

# காளிதாஸ் 2 படப்பிடிப்பை தொடங்கி வைத்த சிவகார்த்திகேயன்




ஷங்கர் இயக்கத்தில் வெளிவந்த பாய்ஸ் திரைப்படம் மூலம் பரத் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமாகினார் . இதை தொடர்ந்து விஷால் நடிப்பில் வெளிவந்த செல்லமே திரைப்படத்தில் வில்லனாக நடித்து இருந்தார். பாலாஜி சக்திவேல் இயக்கத்தில் வெளிவந்த காதல் திரைப்படத்தின் மூலம் மக்கள் மனதை வென்றார் பரத். அதற்கடுத்து பட்டியல், எம் மகன், வெயில், வானம், காளிதாஸ், 555 போன்ற பலப்படங்களில் நடித்தார்.

இந்நிலையில்அடுத்ததாகபரத்,'காளிதாஸ்2'எனும்திரைப்படத்தில் நடிப்பதற்கு கமிட் ஆகியுள்ளார். கடந்த 2019 ம் ஆண்டு பரத் நடிப் பில் வெளியான திரைப்படம் தான் காளிதாஸ். திரில்லர் கதை களத் தில் வெளியான இந்த படத்தில் பரத் போலீஸ் அதிகாரியாக நடித்தி ருந்த நிலையில் இந்த படம் ரசிகர்கள் மத்தியில் பாசிட்டிவ்வான விமர்சனங்களை பெற்றது.

இதன் வெற்றியைத் தொடர்ந்து நான்கு வருடங்கள் கழித்து காளிதாஸ் படத்தின் இரண்டாம் பாகம் உருவாகிறது. 'காளிதாஸ் 2' என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ள இந்த படத்தை முதல் பாகத்தை இயக்கிய ஸ்ரீ செந்தில்தான் இயக்குகி றார். இந்த படத்தை எஸ்கே பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. சாம் சி எஸ் இந்த படத்திற்கு இசையமைக்கிறார். சுரேஷ் பாலா இதன் ஒளிப்பதிவு பணிகளை கவனிக்கிறார். இதில் பரத்துடன் இணைந்து அஜய் கார்த்தியும் முக்கிய கதாபாத்தி ரத்தில் நடிக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு நேற்று பூஜையுடன் தொடங்கப்பட்டுள்ளது. இந்த பூஜையில் நடிகர் சிவகார்த்திகேயன் கலந்து கொண்ட நிலையில் படப்பிடிப்பையும் தொடங்கி வைத்திருக்கிறார். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் ரசிகர்களால் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

# ரூ.900 கோடி வசூலைக் கடந்த கல்கி 2898 ஏ.டி




பிரபாஸ் நடிப்பில் வெளியான பாகுபலி, பாகுபலி 2, சலார், ஆதி புருஷ் ஆகிய படங்களுக்கு இந்தியா முழுவதும் வரவேற்பு கிடைத்தது. வைஜெயந்தி மூவீஸ் நிறுவனம் தனது பொன்விழா ஆண்டைக் கொண்டாடும் விதமாக இந்தியாவில் இதுவரை செலவிடப்படாத அளவிற்கு பொருட் செலவு செய்து 'கல்கி 2898 ஏ.டி' படத்தினை தயாரித்துள்ளது.

நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் ஹீரோவாக நடித்துள்ள படம், 'கல்கி 2898'. இதில் அமிதாப் பச்சன், கமல்ஹாசன், தீபிகா படுகோன், திஷா பதானி, அன்னா பென் உட்பட பலர் நடித்துள்ளனர். சந்தோஷ் நாராயணன் இசை அமைத்துள்ளார். வைஜெயந்தி மூவிஸ் தயாரித்துள்ள இந்தப் படம் ஜூன் 27ம் தேதி திரையரங்குகளில் வெளியானது.

மகாபாரதம், ஏஐ தொழில்நுட்பம், கல்கி அவதாரம் என புராணக் கதைகளுடன் எதிர்காலத்தை கற்பனை செய்து உருவான இப்படம் தொழில்நுட்ப ரீதியாக பாராட்டுகளைப் பெற்றுள்ளது. கமல்ஹாசனின் தோற்றமும் பெரிதும் பாராட்டுகளைப் பெற்று வருகின்றன.

இந்த நிலையில், உலகளவில் 'கல்கி 2898 ஏடி' திரைப்படம் ரூ.900 கோடியை தாண்டியுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இதனால், இப்படம் இன்னும் சில நாள்களில் ரூ.1000 கோடியைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# யுவன் ஷங்கர் ராஜாவின் இசையை கொண்டாட மின்மினி செயலி அறிவித்துள்ள பிரத்யேக போட்டி



உலகின் முதல் தமிழ் ஹைப்பர் லோக்கல் செயலியான மின்மினி, பிரபல இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜாவின் மியூசிக் லேபிள் நிறுவனமான U1 ரெகார்ட்ஸ் உடன் இணைந்து ஹேஷ்டேக் "யு1 வைப்ஸ்" (#U1vibes) என்கிற சிறப்பான போட்டியை அறிவித்துள்ளது. யுவன் சங்கர் ராஜா வெளியிட்டுள்ள தனிப்பாடலான "ஷி இஸ் எ கில்லர்" (She's a Killer) என்ற பாடலை கொண்டாடுவதற்காக மின்மினி செயலி இந்த சிறப்பான போட்டியை அறிவித்துள்ளது.

ஜூலை 5 ம் தேதி தொடங்கியுள்ள இந்த போட்டி, ஆகஸ்ட் 4 வரை நடைபெறும். "ஷி இஸ் எ கில்லர்" (She's a Killer) என்கிற பாடலுக்கு உங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் விதமாக வீடியோக்களை எடுத்து அதை ஹேஷ்டேக் "யு1 வைப்ஸ்" (#U1vibes) என்கிற ஹேஷ்டேக் சேர்த்து மின்மினியில் பதிவிட வேண்டும்.

இந்த போட்டி குறித்து மின்மினி செயலியின் செயல் துணைத் தலைவர் ஸ்ரீராம் கூறும் போது" #U1vibes என்கிற இந்த போட்டிக்காக இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜாவுடன் இணைவது எங்களுக்கு பெரு மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் அளிக்கிறது. மேலும் இந்த போட்டி மூலம் தாங்கள் ரசிக்கும் இசைக்கு ஏற்ப தங்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும் , தனித்துவமான ஒரு அனுபவத்தை பெறவும் எங்களது பயனர்களுக்கு வாய்ப்பளிக்கிறோம். மேலும் இந்த போட்டியினால் யுவனின் இசையை கொண்டாடுவதோடு அவரின் ரசிகர்களுக்கு அவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்த ஒரு புதிய தளத்தையும் வழங்குகிறோம்.

இதன் மூலம் ரசிக்கும்படியான, அற்புதமான கன்டென்ட்களை காண ஆர்வமாக உள்ளோம்" என்றார்.

இந்த போட்டியில் கலந்துகொள்ள கூகுள் பிளே ஸ்டோர் மற்றும் ஆப்பிள் ஆப் ஸ்டோரில் இருந்து மின்மினி செயலியை பதிவிறக்கம் செய்து "ஷி இஸ் எ கில்லர்"(She's a Killer) என்கிற பாடலுக்கு உங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் விதமாக வீடியோக்களை எடுத்து அதை ஹேஷ்டேக் "யு1 வைப்ஸ்" (#U1vibes) என்கிற ஹேஷ்டேக் சேர்த்து மின்மினியில் பதிவிட வேண்டும்.

இந்த போட்டி குறித்து இசையமைப்பாளர் யுவன் வெளியிட்டுள்ள காணொளி தற்போது இணையம் எங்கும் வைரலாக பரவி வருகிறது. அந்தக் காணொளியில் "மின்மினி செயலியின் பயனர்களுக்கு ஆச்சர்யமூட்டும் ஏராளமான பரிசுகள் காத்துக்கொண்டிருக்கிறது. எனவே ஷி இஸ் எ கில்லர்"(She's a Killer) பாடலை பயன்படுத்தி வீடியோக்களை உருவாக்கி அதை மின்மினி செயலியில் பதிவிடுங்கள்" என யுவன் சங்கர் ராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

யுவன் சங்கர் ராஜா எழுதி, இசையமைத்து, இயக்கியுள்ள " ஷி இஸ் எ கில்லர்"(She's a Killer) என்கிற தனிப்பாடல், ஒரு பெண்ணை பார்த்த உடனே சட்டென ஒரு இளைஞனுக்குள் ஏற்படும் காதலை வெளிப்படுத்தும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 2024ல் அறிமுகமான மின்மினி செயலி இதுவரை மூன்று லட்சத்திற்கும் அதிகமான டவுன்லோடுகளை பெற்றுள்ளது. மேலும் சமீபத்தில் நடைபெற்று முடிந்த ஐ.பி.எல்.2024 போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் அதிகாரப்பூர்வ "சோசியல் மீடியா பார்ட்னர்" ஆக செயல்பட்டது. சி.எஸ்.கே. தொடர்பாக ஏராளமான போட்டிகளை நடத்தி நானூறுக்கும்(400க்கும் ) அதிகமான போட்டிக்கான டிக்கெட்களை தனது பயனாளர்களுக்கு வழங்கியுள்ளது.

மின்மினி செயலியில் தற்போது ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் அரபு நாடுகள் உள்ளிட்ட உலகின் ஏராளமான பகுதிகளை சேர்ந்த பத்தாயிரத்திற்கும் அதிகமான சிறிய, நடுத்தரமான மற்றும் குறு அளவிலான தமிழ் கன்டென்ட் படைப்பாளர்கள் இருக்கிறார்கள். மேலும் உலகம் முழுவதும் திறமையான புதிய படைப்பாளர்களை உருவாக்கும் முயற்சியிலும் மின்மினி ஈடுபட்டுள்ளது.

# யோகி பாபுவின் 'போட்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு!




நடிகர் யோகி பாபு தற்போது தமிழ் சினிமாவில் காமெடி நடிகராக மட்டுமல்லாமல் ஹீரோவாகவும் பல படங்களில் நடித்து வருகிறார். அந்த வகையில் கடைசியாக யோகி பாபு நடிப்பில் பூமர் அங்கிள் திரைப்படம் வெளியானது. மேலும் யோகி பாபு, மண்ணாங்கட்டி, சட்னி சாம்பார், வானவன், ஜோரா கைய தட்டுங்க போன்ற பல படங்களை கைவசம் வைத்துள்ளார். இதற்கிடையில் யோகி பாபு, இம்சை அரசன் 23ஆம் புலிகேசி படத்தின் இயக்குனர் சிம்பு தேவன் இயக்கத்தில் 'போட்' திரைப்படத்தில் நடித்திருக்கிறார். இதில் யோகி பாபுவுடன் இணைந்து எம் எஸ் பாஸ்கர், சின்னி ஜெயந்த், கௌரி கிஷன் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்தை மாலி அண்ட் மான்வி மூவி மேக்கர்ஸ் நிறுவனமும் சிம்பு தேவன் என்டர்டெயின்மென்ட் நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ளது. ஜிப்ரான் இந்த படத்திற்கு இசை அமைக்க மாதேஷ் மாணிக்கம் இதன் ஒளிப்பதிவு பணிகளை கவனித்திருக்கிறார்.

காமெடி கலந்த பொழுதுபோக்கு படமாக உருவாகி இருக்கும் இந்த படம் ஒரு சர்வைவல் திரில்லர் படமாகும். ஏற்கனவே இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரும் அதைத் தொடர்ந்து படத்தின் டீசரும் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்றது. இந்நிலையில் இந்த படம் வருகின்ற ஆகஸ்ட் 2ம் தேதி வெளியாக இருப்பதாக படக்குழுவினர் வீடியோஒன்றைவெளியிட்டுஅதிகாரப்பூர்வமாகஅறிவித்துள்ளனர்.மேலும்இந்தபடத்தைதமிழ்நாட்டில்சக்திபிலிம்பேக்டரிநிறுவனம்வெளியிடுவதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. சுதந்திர போராட்ட காலத்தில் நடந்த உண்மை சம்பவத்தின் அடிப்படையில் இந்த படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 1945ம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த போது ஜப்பான், சென்னையில் குண்டு போட்ட போது, ஒரு சிலர் ஒரு படகில் இந்தியாவில் இருந்து தப்பிச்செல்ல முடிவெடுத்து கடலில் செல்கின்றனர். அப்போது திடீரென படகில் ஓட்டை விழுகிறது, இதனால் ஏற்படும் பிரச்சனை, அவர்களுக்குள் ஏற்படும் அடிதடி, அதன் பின்னர் ஏற்படும் திருப்புமுனை ஆகியவைதான் இந்த படத்தின் கதை என்பது சற்று முன் வெளியாகியுள்ள வீடியோவில் இருந்து தெரிய வருகிறது

# டி.என்.பி.எல்.: திண்டுக்கல்லை வீழ்த்தி சேலம் அபார வெற்றி




டி.என்.பி.எல். டி20 கிரிக்கெட் தொடரில் நேற்று நடந்த 6வது லீக் ஆட்டத்தில் திண்டுக்கல் டிராகன்ஸ் சேலம் ஸ்பார்டன்ஸ் மோதின. இதில் டாஸ் வென்ற திண்டுக்கல் முதலில் பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, அந்த அணியின் தொடக்க வீரர்களாக ஷிவம் சிங் மற்றும் கேப்டன் ரவிச்சந்திரன் அஸ்வின் களமிறங்கினர். ஷிவம் 2 ரன்னிலும், அஸ்வின் 6 ரன்னிலும் அவுட் ஆகினர். அடுத்துவந்த விமல் குமார் 47 ரன்னிலும், இந்திரஜித் 51 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இறுதியில் திண்டுக்கல் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 149 ரன்கள் எடுத்தது.

சேலம் தரப்பில் அந்த அணியின் ஹரீஷ் குமார், சன்னி சந்து தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதையடுத்து 150 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சேலம் தொடக்க வீரர்களாக அபிஷேக், கெவின் களமிறங்கினர். அபிஷேக் 28 ரன்னிலும், கெவின் 46 ரன்னிலும் அவுட் ஆகினர். அடுத்து களமிறங்கிய விவேக் 51 ரன்கள் குவித்தார். இறுதியில் சேலம் 18.1 ஓவரில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 150 ரன்கள் எடுத்தது.

இதன் மூலம் திண்டுக்கல்லை 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி சேலம் அபார வெற்றிபெற்றது.

# மாவட்ட ஆக்கி லீக்: செயின்ட் பால்ஸ் அணி சாம்பியன்




தமிழ்நாடு ஆக்கி அமைப்பு சார்பில் பள்ளி அணிகளுக்கான ஆக்கி லீக் போட்டி முதல்முறையாகநடத்தப்பட்டது.இதில்சென்னை மாவட்ட பள்ளி அணிகளுக்கான ஆக்கி லீக் போட்டிஎழும்பூரில்உள்ளமேயர்ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்தது. இதன் இறுதிப்போட்டியில் செயின்ட் பால்ஸ் பள்ளி 70 என்ற கோல் கணக்கில் ஐ.சி.எப். பள்ளியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் செயின்ட் பால்ஸ் அணி வருகிற 20, 21ந் தேதி நடைபெறும் மண்டல அளவிலான போட்டிக்கு முன்னேறியது.

வெற்றி பெற்ற பள்ளி அணிகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணைய அதிகாரி ராஜா பரிசுகளை வழங்கினார். பரிசளிப்பு விழாவில் சென்னை மாவட்ட ஆக்கி சங்க பொருளாளர் அலெக்ஸ், துணைத்தலைவர் லட்சுமி நாராயணன், போட்டி இயக்குனர் அன்னகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கிரிக்கெட் மட்டுமல்ல... அனைத்து விளையாட்டுகளையும் சமமாக நடத்துங்கள் சிராக் ஷெட்டி ஆதங்கம்




அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்ற 9வது டி20 உலகக்கோப்பையை ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி கைப்பற்றி அசத்தியது. இதன்மூலம் 17 ஆண்டுகளுக்கு பின் டி20 உலகக்கோப்பையை கைப்பற்றி இந்தியா வரலாறு படைத்திருக்கிறது. இதைத் தொடர்ந்து நாடு திரும்பிய இந்திய அணி வீரர்கள் முதலில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து வாழ்த்து பெற்றனர். அதன் பிறகு மும்பை சென்ற இந்திய அணி வீரர்கள் மரைன் டிரைவ் பகுதியிலிருந்து வான்கடே மைதானம் வரையில் திறந்தவெளி பேருந்தில் வெற்றி பேரணி சென்றனர்.

கடைசியாகவான்கடேஸ்டேடியத்தில்பாராட்டு விழா நடைபெற்றது. அதன் பிறகு டிராபி வென்ற இந்திய அணிக்கு ரூ.125 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ரோகித் சர்மா, சூர்யகுமார் யாதவ், ஷிவம் துபே மற்றும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஆகியோருக்கு மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டே அழைப்பு விடுத்திருந்தார். மேலும், இவர்களுக்கு மகாராஷ்டிரா மாநில அரசு ரூ.11 கோடி பரிசுத் தொகை அறிவித்தது.

இந்த நிலையில் இந்திய பேட்மிண்டன் வீரர் சிராக் ஷெட்டி மகாராஷ்டிரா அரசு விளையாட்டுகளில் பாரபட்சம் காட்டுகிறது என்று ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "தாமஸ் டிராபி என்பது உலகக் கோப்பை டிராபியை வெல்வதற்கு சமமானது. 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த தாமஸ் டிராபியில் இந்திய அணி முதல் முறையாக டைட்டில் வென்றது. இதில், இறுதிப் போட்டியில் இந்தோனேஷியாவை வீழ்த்திய இந்திய பேட்மிண்டன் அணியில் நானும் ஒருவராக இருந்தேன். நான் மட்டுமே மகாராஷ்டிரா வீரர். டி20 உலகக் கோப்பை டிராபி வென்ற கிரிக்கெட் நட்சத்திரங்களை மாநில அரசு கௌரவிக்கும் போது எனது முயற்சியையும் அரசு அங்கீகரித்திருக்க வேண்டும்.

கிரிக்கெட் மட்டுமின்றி எல்லா விளையாட்டுகளையும் அரசு சமமாக நடத்த வேண்டும். மேலும், நான் கிரிக்கெட்டிற்கு எதிரானவன் அல்ல. உண்மையில் பேட்மிண்டன் வீரர்கள் டி20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியை டிவியில் பார்த்து உற்சாகமாக கொண்டாடினோம். அதோடு, தென் ஆப்பிரிக்காவிற்கு எதிரான வெற்றியால் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆனால், நாங்களும் சில ஆண்டுகளுக்கு முன்பு வரலாற்று வெற்றியை பதிவு செய்தோம். மாநில அரசு கௌரவிக்கவும் இல்லை. பாராட்டி பரிசும் வழங்கவில்லை. கடந்த 2022 ஆம் ஆண்டிற்கு முன்பு இந்திய அணி பேட்மிண்டன் அரையிறுதிப் போட்டிக்கு கூட சென்றதில்லை. ஆனால், நாங்கள் பட்டத்தை வென்று சரித்திரம் படைத்தோம்" என்று கூறினார்.

# பாரீஸ் ஒலிம்பிக் தொடக்க விழா; தேசிய கொடியை ஏந்தி செல்லும் பி.வி.சிந்து




பாரீஸ் ஒலிம்பிக் தொடக்க விழா; தேசிய கொடியை ஏந்தி செல்லும் பி.வி.சிந்து

ஒலிம்பிக் தொடர் பாரீசில் வரும் 26ம்தேதி முதல் ஆகஸ்டு 11ம்தேதி வரை நடைபெற உள்ளது.

33வது ஒலிம்பிக் திருவிழா பிரான்ஸ் தலைநகர் பாரீசில் வரும் 26ம்தேதி முதல் ஆகஸ்டு 11ம்தேதி வரைநடைபெறஉள்ளது.இதில்,16விளையாட்டுகளில் சுமார் 112 இந்திய வீரர்கள், வீராங்கனைகள் களமிறங்குகிறார்கள்.

கடந்த 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் ஒருதங்கம், இரண்டு வெள்ளி மற்றும் நான்கு வெண்கலம் அடங்கிய ஏழு பதக்கங்களை இந்தியா வென்ற நிலையில், இம்முறை அதைவிட கூடுதல் பதக்கங்களை வெல்லும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்நிலையில் பாரீசில் நடைபெற உள்ள ஒலிம்பிக் தொடரின் தொடக்க விழா அணிவகுப்பில் இந்தியா பெண்கள் சார்பில் பேட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து தேசிய கொடியை ஏந்திச்செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்கள் சார்பில் டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமல் தேசிய கொடியை ஏந்திச்செல்வார் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒலிம்பிக் தொடரில் இந்திய அணியின் தலைவராக ககன் நரங் செயல்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அணித்தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளககன்நரங்5முறைஒலிம்பிக்கில் பங்கேற்றவர். ஒலிம்பிக் அணித்தலைவராக மேரி கோம் பெயர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ககன் நரங் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்**

**விளக்கம்:**
**சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்லவேண்டும், பயன் இல்லாதவைகளாகிய சொற்களை சொல்லவே கூடாது.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.